# தினன் (Tinan)




**வசிப்பிடம்:** சுமார் 30,000 தினன் மொழி பேசும் மக்கள் இமயமலைத் தொடரின் மத்திய பாகத்தில் இந்திய-சீன எல்லையின் இருபுறங்களிலும் வாழ்கின்றார்கள். இவர்கள் கடல் மட்டத்திலிருந்து 7,000 மீட்டர்கள் வரை உயரும் மலைகளின் சரிவுகளில் வசிக்கின்றார்கள். பெரும்பாலான தினன்கள் இந்தியாவில் உள்ளனர். சுமார் 24,000 தினன்கள் ஹிமாச்சல் பிரதேசத்தின் வடக்கில் உள்ள சந்திரபாக (Chandrabhaga) பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் ஸ்பிதி (Spiti) மற்றும் லாஹௌல் (Lahaul) மாவட்டத்தில் வாழ்கின்றார்கள். இந்தியாவில் முக்கியத் தினன் கிராமம் கொந்ல(Gondla) ஆகும்.ஒரு சிறு எண்ணிக்கையிலான தினன்கள் சீனாவில் உள்ளனர். மொழியியலாளர்களான சி.எப். மற்றும் எப். எம். வெகலின் (C F and F M Voegelin) கி.பி.1977 ல் 450 லிருந்து 1,600 வரையிலான தினன்கள் மேற்கு திபெத்தில் வசிப்பதாக அட்டவணையில் காட்டினார்கள். பூகோள மற்றும் அரசியல் தடைகள் இவர்களை வெளியுலகத்திலிருந்து பிரித்துவைத்துள்ளன.

**அடையாளம்:** சீனாவில் திபெத்தியர்கள் என அறியப்படும் தினன்களுக்கு லாஹுலி (Lahuli) மற்றும் போட்யா (Bhotia) என்ற பெயரும் உண்டு. இந்தியாவில் இவர்கள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டலாஹௌலபழங்குடியினரின் ஓர் அங்கமாவார்கள். போட்யா என்றால் திபெத்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் எனப் பொருள்படும். லாஹுலி என்பது முன்னாட்களில் இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குள் இருந்த லாஹௌல் மாவட்டத்தில் வசிப்பவர்களைப் பொதுவாகக் குறிக்கும் வார்த்தையாகும்.

**மொழி:** தினன் மற்றும் மற்ற திபெத்திய மக்களுக்கிடையில் கலாச்சாரத்தில் மிகக் குறைந்த வித்தியாசமே இருந்தாலும்` இவர்களது மொழியே இவர்களைத் தனி இனமாகப் பிரிக்கத் தகுதிப்படுத்துகிறது. தினன், மேற்கு ஹிமாலய/கனௌரி (Kanauri) மொழிப் பிரிவைச்சேர்ந்த தனித்தன்மையான மொழியாகும். இம்மொழி 56 லிருந்து 63 சதவீதம்வரை சம்பா லாஹுலி (Chamba Lahuli) மொழியோடும் 32 லிருந்து 37 சதவீதம்வரை புனன் (Bunan) மொழியோடும் 21 சதவீதம் ஸ்பிதி மொழியோடும் ஒத்துப்போகிறது மற்றும் மத்திய திபெத்திய மொழியோடு 13 சதவீதம் மட்டுமே ஒத்துப்போகிறது. மற்ற திபெத்தியர்கள் தினன் மொழியைப் புரிந்துகொள்ள இயலாது.

**வரலாறு:** தினன் மக்கள் வாழும் பகுதி பத்தாம் நூற்றாண்டுகளில் லதாகி ராஜ்யத்தைச் சேர்ந்ததாக இருந்தது. கி.பி. 1950 மற்றும் கி.பி. 1960 களில் எல்லையில் நடந்த யுத்தத்தில் சீனா, தினன்கள் வாழும் இந்தியாவின் அக்சாய் சின் நிலப்பரப்பைக் கைப்பற்றியது.

**பழக்கவழக்கங்கள்:** தினன்கள் திறமையுடைய வணிகர்களாவார்கள். பெண்கள் சுதந்திரமாக வாழ்வதில் பெயர்பெற்றவர்கள். 'இவர்களுடைய கணவர்கள் வியாபார சம்பந்தமாகச் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்வதால் இவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணம் செய்து கொள்கின்றார்கள். ஆண்கள் உப்பு, தானியம் மற்றும் கம்பளி மயிர் ஆகியவற்றை மற்ற மக்களுக்கு விற்பனை செய்கின்றார்கள். சிலர் இதன்மூலம் மிகுந்த செழிப்படைந்துள்ளனர்.'

**மதம்:** பெரும்பாலான தினன் மக்கள் புத்த மதத்தினர்களாவார்கள்;ஆனால் சில குடும்பங்கள் இந்து மதத்தைத் தழுவிக்கொண்டுள்ளன. வட இந்தியாவில் புத்த மதத்தின் பலம் பெருமளவு தினன் மக்களின் செழிப்பு மற்றும் தயாளத்தைச் சார்ந்துள்ளது. 'இவர்கள் மக்களுக்கும் புத்தக் கோவில்களுக்கும் தாராளமாகக் கொடுப்பதால் உண்டாகும் புண்ணியங்களால் ஆவிக்குரிய முறையில் பாதுகாப்படைவதாக நம்புகின்றார்கள்'

**கிறிஸ்துவம்:** இந்தியாவில் தினன்கள் மத்தியில் சில கிறிஸ்தவர்கள் உண்டு, திபெத்தியப் பகுதிகளில் ஒருவரும் கிடையாது. தினன்கள் மத்தியில் ஒரு சிலரே சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். சார்லஸ் கட்ஸ்லப் (Charles Gutzlaff) அவர்கள் மொராவியர்களைத் திபெத்தில் மிஷன் பணியை ஆரம்பிக்கச் சவால்விட்டபோது லாஹுலியில் மிஷன் பணி தொடங்கியது. 'முதல் மிஷனெரிகளான ஏ. டபுள்யு . ஹைடு (A.W.Heyde) மற்றும் ஈ.பேஜெல் (E.Pagell) ஆகியோர் திபெத்திய கிராமமான க்யலங்கில் (Kyelang) வந்து தங்கினார்கள்.' வேதாகமப் பகுதிகள் தினன் மொழியில் கி.பி. 1908 ல் மொழிபெயர்க்கப்பட்டன; ஆனால் கி.பி. 1915 ற்கு பிறகு அச்சடிக்கப்படவில்லை. தினன் மொழியில் சுவிசேஷ ஒலிப்பதிவுகள் இந்நாட்களில் கிடைக்கின்றன.




**Population:**
29,350 (2000)
34,400 (2010)
40,300 (2020)

**Countries:** India, China

**Buddhism:** Tibetan

**Christians:** 20

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Lahuli Tinan,Lahuli, Bhotia of Lahul, Lahauli, Lahouli, Rangloi, Gondla, Tinani, Teenan, Gondhla, Lahaula

**மக்கள்தொகை:** 24,534 in India (1994, India Missions Association); 450 to 1,600 in China (1977, C Voegelin and F Voegelin)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, மேற்கு ஹிமாலய, கனௌரி மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 80%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1908

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Lahouli Tinan

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : LBF

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்